


## தேர்ச்சி: ஒன்று :- இறைவன் மட்டில் நிறை விசுவாச வாழ்வு வாழ்வர்

4

# 1.4. அடிமை நிலையற்ற உரிமை வாழ்வு









- மேலே போடப்பட்டிருக்கும் படங்களை அவதானிக்கவும்.
  - இவை வெளிப்படுத்தும் செய்திகள் எவை?
  - இவை பற்றி நீர் என்ன நினைக்கிறீர்?
  - இறைவன் மனிதனை படைக்கும்போது அவன் சுதந்திரமாக வாழவேண்டுமென்று விரும்பினார். இதற்காகவே, படைப்புகள் அனைத்தையும் அவன் கையில் ஒப்படைத்திருந்தார்.

* மனிதனோ தனது சுயநலத்தால் கடவுள் கொடுத்த சுதந்திரத்தைத் தவறான வழியில் பயன்படுத்தி பாவம் செய்தான்.

## பாவத்தின் பயனாக

துன்பம், நோய், மரணம், தீமை

ஆகிய தீமைகளுக்கு மனிதன் அடிமையானான்.

**மனிதன் பெற்ற சுதந்திரத்தை நேரிய வழியில் செயற்படுத்த வேண்டும்.**

**தீமைகளில் இருந்து**

**மனிதன் விடுதலை பெற**

**இறைவன் திருவுளமானார்.**

## மோசேயின் தலைமையில் இஸ்ரயேல் மக்களின் விடுதலை

எகிப்து நாட்டை பார்வோன் மன்னன் ஆட்சி செய்து வந்த காலத்தில் அந்நாட்டில் அவர்களோடு சேர்ந்து வாழ்ந்துவந்த இஸ்ரயேல் மக்கள் பல துன்பங்களுக்கு உட்பட்டு அடிமைகளாகவே இருந்தனர். இறைவன் மோசேயை அவர்களின் தலைவனாக ஏற்படுத்தினார்.

செங்கடல் வழியாக இஸ்ரயேல் மக்களை வழிநடத்தும் முழு அதிகாரத்தையும் இறைவன் மோசேக்கு அளித்தார்.



**மோசே தம் கையைக் கடல்மேல் நீட்டவே, ஆண்டவர் கீழைக்காற்றை இரவு முழுவதும் வன்மையாக வீசச் செய்து கடலைப் பின்வாங்க வைத்து உலர்ந்த தரையாக்கினார். நீர்த்திரள் பிரிக்கப்பட்டது. வலப்பக்கத்திலும் இடப்பக்கத்திலும் உள்ள நீர்த்திரள் அவர்களுக்குச் சுவராக விளங்க இஸ்ரயேல் மக்கள் கடல் நடுவே உலர்ந்த தரையில் நடந்து சென்றனர்.**

**(விப. 14 : 21 - 22)**

இஸ்ரயேல் மக்களின் செங்கடல் பயணத்தின் வெற்றிக்குக் காரணமாக அமைந்தவை.

- மோசே இறைவன் அளித்த தலைமைப் பொறுப்பை ஏற்றுக்கொண்டமை.
- மோசே தனக்குக் கொடுத்த அதிகாரத்தை இறை நம்பிக்கையோடு, பயனுள்ள முறையில் துணிவோடு செயற்படுத்தியமை.
- இஸ்ரயேல் மக்கள் தமது சுதந்திரத்தை மோசேயின் தலைமைத்துவத்துக்குப் பணிந்து செயற்பட்டமை.

- பார்வோன் மன்னனின் படைகளின் அழிவுக்குக் காரணம்.

- மன்னனுக்குக் கொடுக்கப்பட்ட தலைமைத்துவ அதிகாரம் சுயநலத்திற்காகப் பயன்படுத்தப்பட்டது.
- இறை நம்பிக்கை இல்லாமல் தம் சுயபலத்தில் நம்பிக்கை வைத்து நீதியற்ற முடிவு எடுக்கப்பட்டது.
- மற்றவர்களின் சுதந்திரம் மதிக்கப்படாமல் மிதிக்கப்பட்டது.

**இந்நிகழ்வுகளின் வழியாக இஸ்ரயேல் மக்கள் உணர்ந்துகொண்டவை**

* இறைவனின் இணையில்லா வல்லமையை
* உண்மையான தலைவர்களின் செயற்பாடுகளில் நாம் நம்பிக்கை வைத்து ஒத்துழைத்தல் என்பதை
* இறை பயம் எப்போதும் இருக்க வேண்டும் என்பதை
* சுயநலமுள்ள சிந்தனை கடின மனத்தையும் அழிவையுமே கொண்டு வரும் என்பதை
* துன்பங்களும் துயரங்களும் அழிவுகளும் மனமாற்றத்திற்கு இட்டுச் செல்ல வேண்டும் என்பதை

இறைவன் இஸ்ராயேல் மக்களை எகிப்து நாட்டிலிருந்து மீட்ட நிகழ்ச்சி திருவிவிலியத்தில் பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

**இவ்வாறு ஆண்டவர் அந்நாளில் எகிப்தியர் பிடியினின்று இஸ்ரயேலருக்கு விடுதலையளித்தார். கடற்கரையில் எகிப்தியர் செத்துக் கிடப்பதை இஸ்ரயேலர் கண்டனர். எகிப்தியருக்கு எதிராக ஆண்டவர் கைவன்மை காட்டிச் செயல் புரிந்ததை உணர்ந்து ஆண்டவர்மீது மக்கள் அச்சம் கொண்டனர். மேலும் அவர்கள் ஆண்டவரிடமும் அவர் அடியார் மோசேயிடமும் நம்பிக்கை வைத்தனர். (விப. 14:30−31)**

**செயற்படுவோம் :**

அடிமை வாழ்வில் மூழ்கிவிடாமல் சுதந்திர வாழ்வில் வளர்ந்து மகிழ்ச்சியாக வாழ

- தினமும் செபத்தில் ஈடுபடுவோம்.
- பெற்றோர், ஆசிரியர்கள், பெரியோருக்கு மதிப்பளித்து அவர்களின் முன்மாதிரிகைகளைப் பின்பற்றுவோம்.
- மற்றவர்களுடைய சுதந்திரத்திற்கு இடமளித்து அவர்கள் கருத்துக்களுக்கு செவிமடுப்போம்.
- துன்பங்கள், நோய்கள் தொடரும்பொழுது இறைவனுக்குள் திரும்பிவர முயற்சி செய்வோம்.

**கிறிஸ்துவில் நாம் பெற்ற உரிமை வாழ்வு**



**கிறிஸ்து அடிமை நிலையிலிருந்து நம்மை விடுவித்து நமக்கு உரிமை வாழ்வை அளித்துள்ளார். அதில் நிலைத்திருங்கள். மீண்டும் அடிமைத்தளை எனும் நுகத்தை உங்கள் மேல் ஏற்றுக் கொள்ளாதீர்கள்.**

**(கலா. 5 : 1)**

## அறிந்து கொள்ளவும்

- நம் ஆண்டவராகிய இயேசுக்கிறிஸ்து தமது பாடுகள், மரணம், உயிர்ப்பினால் நமக்கு உரிமை வாழ்வு அளித்துள்ளார்.
- இவ்வுரிமை வாழ்வைப் பாவத்தினால் நாம் ஒருபோதும் இழந்துவிடாமல் விழிப்பாய் இருக்க வேண்டும்.
- எப்பொழுதும் தூய ஆவியின் துணை வேண்டி இறை நம்பிக்கையில் நிலைத்து நின்று, அன்பின் வழியில் செயலாற்றி வாழ வேண்டும்.
- அன்றாட வாழ்வில் கடவுளோடு உறவை வளர்த்து நிறைவாழ்வு வாழ செபங்கள், அருளடையாளங்கள், திருப்பலி என்பன ஊட்டம் அளிக்கின்றன.

## மாணவர் செயற்பாடு:

- கோடிட்ட இடங்களை நிரப்புங்கள்.

| இறைவனல் அழைக்கப்பட்ட மோசே | இறைவனால் அழைக்கப்பட்ட நான் |
|---|---|
| 1. கடவுள்மீது நம்பிக்கை வைத்திருந்தார். | 1. கடவுள்மீது ................................ |
| 2. மக்களின் நம்பிக்கைக்கு உரியவரானார். | 2. சக மாணவரின் ........................... |
| 3. இறைவனின் குரலாக செயற்பட்டார். | 3. வகுப்பறையில், வீட்டில் ................. |
| 4. இறைவனின் விருப்பத்திற்குக் கீழ்ப்படிந்தார். | 4. ஆசிரியர், பெற்றோர், பெரியோருக்கு ................................................. |

## விடையளிக்கவும்

1. பாவம் என்றால் என்ன?
2. செங்கடலைக் கடந்த நிகழ்வினூடாக இஸ்ரயேல் மக்கள் உணர்ந்து கொண்டவை எவை?
3. இஸ்ரயேல் மக்களைத் துரத்திவந்த பார்வோனின் படைகள் அழிந்துபோகக் காரணம் என்ன?

4. கத்தோலிக்க மாணவர் ஒருவருக்கு இருக்கவேண்டிய தலைமைத்துப் பண்புகள் எவை?
5. இஸ்ரயேலர் மோசேயை வீரமுள்ளவராக ஏற்றுக்கொள்வதற்கான காரணங்கள் இரண்டைக் குறிப்பிடுக.

## தீர்மானம்...

- **திருமுழுக்கினால் நான் பெற்றுக்கொண்ட உரிமை வாழ்வை இழந்துவிடாமல் வளர்த்துக்கொள்ள விழிப்பாய் இருப்பேன்.**

- இப்பாடலைச் சிந்திக்கவும்.

## பயன்படுத்தும் இறைவா......

பயன்படுத்தும் இறைவா
பதரான என்னைப் பயனுள்ள கருவியாய்
பயன்படுத்தும் இறைவா

1. எனது கரங்கள் உம்பணி புரிய
எனது கால்கள் உம்வழி செல்ல
எனது கண்கள் உம்மைப்போல் பார்க்க (2)
எனது நாவும் உம்புகழ் பாட

2. எனது செவிகள் உம்மொழி கேட்க
எனது மனமும் உம்மையே காட்ட
எனது மனமும் உம்மையே நினைக்க (2)
எனது இதயம் உம்மில் களிக்க

(பரமனுக்குப் பண்ணிசை # 58)